# பொலிஸாரின் 350 ஜீப்கள் அரசியல்வாதிகளிடம்

விலை ரூபா 5-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 35 திருவள்ளுவர் ஆண்டு 2025 தை 28 இதழ் 359
யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 10-2-1994

(கொழும்பு)

பொலிஸ் திணைக்களத்திற்கென அண்மையில் இறக்குமதி செய்யப்பட்ட 350 பஜ்ரோ ஜீப்களை அரசியல்வாதிகள் அபகரித்துக் கொண்டுவிட்டதாக பொலிஸ் திணைக்களம் குற்றம் சாட்டியுள்ளது.

ஏற்கனவே பல பஜ்ரோ ஜீப்கள் அரசியல்வாதிகளின் பாவனைக்கு வழங்கப்பட்டுள்ளதாகவும் புதிய அமைச்சர்களுக்கும் முன்னாள் அமைச்சர்களுக்கும் பஜ்ரோ ஜீப்கள் வழங்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அண்மையில் பதவியுயர்வு பெற்ற 127 உதவிப்பொலிஸ் சுப்பரண்டன்களுக்கு இதுவரை உத்தியோகபூர்வ வாகனங்கள் எதுவும் கிடைக்கவில்லை எனவும் பொலிஸ் திணைக்களம் தெரிவித்துள்ளது.

(5-ம் பக்கம் பார்க்க)

## தென்பகுதி சிறைகளில் 1,085 தமிழர்கள்

(கொழும்பு)

தென் பகுதி தடுப்பு முகாம்களில் 1085 தமிழர்கள் தடுத்து வைக்கப்பட்டிருக்கின்றனர் என்று இலங்கை மனித உரிமை குழுத் தலைவர் ஜே. எம். ஏ. சோசா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறியதாவது: சிங்களவர் 314 பேரும் முஸ்லீம் 4 பேரும் மேற்படி தடுப்பு முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டிருக்கின்றனர்.

92ம் ஆண்டு ஜனவரி முதல் 1993ம் ஆண்டு டிசம்பர் வரை 13 673 தகவல்கள் மனித உரிமைக் குழுவுக்கு கிடைத்துள்ளது என்றார். -உ-சி

★ இலங்கையில் [redacted]

# தமிழர் சுயநிர்ணய உரிமையை ஏற்குமாறு ஐ. நா.வுக்கு மகஜர்

## ஜெனிவாவில் 17 அமைப்புக்கள் கோரிக்கை

(ஜெனிவா)

**தமிழர்களின் சுயநிர்ணய உரிமை ஏற்றுக்கொள்ளப்படவேண்டும் என்று ஐக்கிய நாடுகள் சபை செயலாளருக்கு 17 பொது அமைப்புகள் ஜெனிவாவில் வைத்து கோரிக்கை விடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.**

தற்பொழுது ஜெனிவாவில் நடைபெறும் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் 50 வது கூட்டத் தொடரில் இந்த 17 அமைப்புகளும் இந்த கோரிக்கையை விடுத்துள்ளன.

இலங்கையின் வடக்கு கிழக்குப் பகுதிகள் தமிழர்களின் தாயகம் என்பது அங்கீகரிக்கப்படவேண்டும். தமிழ் மக்கள் தமது அரசியல் அந்தஸ்தினை நிர்ணயிக்கும் உரிமை உள்ளது என்பது ஏற்

(5ம் பக்கம் பார்க்க)

## பி. பி. ஸி. செய்திகளிலும் இலங்கை தணிக்கை

(கொழும்பு)

அரச ரூபவாஹினியிலும், ஒலிபரப்புக் கூட்டுத்தாபனச் செய்தியிலும் செய்தித் தணிக்கை செய்து வரும் இலங்கை அரசு தற்போது இலங்கை தொடர்பாக வரும் பி.பி.ஸி. ஒலிபரப்பு, சி.என்.என். தொலைக்காட்சி செய்திகளிலும் கடுமையாக தணிக்கை செய்து வருகிறதாம்.

மேற்படி இரு ஒலிபரப்பு

(5ம் பக்கம் பார்க்க)

## விஜே, ரணில், கூரே தலைமையில் ஐ. தே. க. மூன்றாகப் பிளவுறும்?

(கொழும்பு)

காமினி திஸநாயக்காவின் இணைவை அடுத்து ஐ.தே.க. மூன்று பிரிவாக பிளவுபட்டுள்ளதாக பத்திரிகைச் செய்திகள் கூறுகின்றன.

ஜனாதிபதி விஜயதுங்க, பிரதமர் ரணில், அமைச்சர் சிறிசேன கூரே ஆகியோர் தலைமையிலேயே இப்பிரிவு ஏற்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது. எனினும் இச்செய்திகளை கட்சியின் செயலாளரான அமைச்சர் கூரே மறுத்துள்ளார்.

காமினி மற்றும் அநுரா ஆகியோர் கட்சியில் இணைந்ததால் எவ்வித அதிகாரப் போட்டியும் ஏற்படவில்லை எனவும் அவர் கூறினார். மேலும் வேண்டுமென்றே பத்திரிகைகள் தவறு கூறுவதாக

(5-ம் பக்கம் பார்க்க)

## கல்முனைக் கடலில் ஹெலியிலிருந்து சூடு

(யாழ்ப்பாணம்)

பூநகரி கல்முனைக் கடற் பிராந்தியத்தில் நேற்றுக்காலை 7 மணியளவில் மீன் பிடித்துக் கொண்டிருந்த மீனவர்களை நோக்கி ஹெலிகொப்டர் ஒன்று சரமாரியான துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டது.

இதையடுத்து மீனவர் அனைவரும் ஒருவாறு பாதுகாப்பாக கரை சேர்ந்தனர்.

தொடர்ந்து சிறிது நேரம்

(6-ம் பக்கம் பார்க்க)

★ இலங்கை உட்பட

## தெற்காசிய நாடுகளுக்கு விரைவில் ஆயுதத் தடையாம்!

(புதுடில்லி)

இலங்கை உட்பட தெற்கு ஆசிய நாடுகள் இராணுவத்திற்கு அபரிமிதமாக செலவிடும் பணத்தை குறைத்து அபிவிருத்திப் பணிகளுக்கு கூடுதல் நிதியை ஒதுக்கவேண்டும் என ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி திட்ட பணிப்பாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

பணிப்பாளர் திரு. ஜேம்ஸ் ஸ்பெத் தற்போது தெற்காசிய நாடுகளுக்கான விஜயத்தை மேற்கொண்டுவரும் இவ்வேளையில் 2000 ஆண்டளவில் இந்த நாடுகள் படிப்படியாக இராணுவ செலவை குறைத்திடவேண்டும் என்று வலியுறுத்தி வருகிறார்.

தெற்காசிய நாடுகள் ஒத்து வரும் பட்சத்தில் இந்த நாடுகளுக்கான ஆயுத விநியோக

(5-ம் பக்கம் பார்க்க)

## மண்டைதீவு இராணுவம் மீனவர் மீது சூடு

(யாழ்ப்பாணம்)

மண்டைதீவு கடற் பகுதியில் மீன்பிடித்துக் கொண்டிருந்த மீனவர்களை நோக்கி நேற்றிரவு 9 மணியளவில் படையினர் "பரா" வெளிச்சம் பாய்ச்சிய நிலையில் சரமாரியான துப்பாக்கிப் பிரயோகம் நடாத்தினர்.

இதனால் மீனவர் ஒருவர் தலையிலும் தோள் மூட்டுப் பகுதியிலும் படுகாயமடைந்தார். குருநகரைச் சேர்ந்த செபஸ்தியான் சிறில் (வயது 35) என்பவரே படுகாயமடைந்தவராவார். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். -சி

## முன்னாள் பிரதமர் 'டி.எஸ்.' இன் பாதையில் செல்ல 'டி. பி.'யும் முயல்கிறார்

(கொழும்பு)

ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கவும், இலங்கையின் முதலாவது பிரதமர் டி. எஸ். சேனநாயக்காவின் வழியை பின்பற்றி பெரும்பான்மையினர் சிறுபான்மையினரின் தயவில் தங்கியிருக்காத ஒரு அரசியல் நிலையை உருவாக்கி வருகிறார் என "சண்டே ரைம்ஸ்" கட்டுரையொன்று தெரிவித்துள்ளது.

1947ம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் மத்திய மாகாணத்தில் மலையக தொழிலாளருக்கு வாக்குரிமை இருந்ததினால் அவர்கள் ஒரு பகுதி

(6-ம் பக்கம் பார்க்க)

கொழும்பில்

## சுதந்திரப் பத்திரிகையாளர் கண்டனக் கூட்டம்

(கொழும்பு)

பிரபல பத்திரிகையாளர் ரிச்சாட் டி சொய்சாவைக் கொலை செய்ததற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் முகமாக சுதந்திரப் பத்திரிகையாளர் சங்கம் கொழும்பில் எதிர்வரும் 21-ம் திகதி கண்டனக் கூட்டம் ஒன்றை நடாத்தவுள்ளது.

இந்தக் கொலைக்கு அரசாங்கமும் பொலிஸ் அதிகாரி ரணில் குணசிங்காவுமே காரணம் என்று மக்கள் மத்தியில் சந்தேகம் நிலவிவருகின்றது.

(5-ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### நோவு வைத்தியம்

ஒட்டகவிடியம் சமத்திரி நோவு எண்ணெ கிடைக்குமிடம் எஸ். கீ. மெடிக்கல்ஸ், 490, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (கி 739)

### விற்பனைக்கு

ஆத்மஜோதி நா. முத்தையா அவர்கள் எழுதிய "மரணத்தின் பின் மனிதன் நிலை" (மாண்புறு கதைகள்) பிரபல புத்தகசாலைகளில் கிடைக்கும். கி-754

### மீண்டும் ஆரம்பம்

"ராஜ போஜ்ட்டேச ரெசினிக்" மீண்டும் திருத்த வேலைகள் ஆரம்பித்துள்ளது. கமெரா, பிளாஷ்கன், பைனகுலர்ஸ், வீடியோ கமரா போன்றவை சிறந்த முறையில் வழமைபோல் திருத்திக் கொடுக்கப்படும். N S நாராயணசாமி 301 கஸ்தூரியார் வீதி மேல்மாடி கன்னாதிட்டி சந்திக்கு அருகாமையில்) யாழ்ப்பாணம். (கி-751)

### தவறிவிட்டது

1-2-94 அன்று நல்லூருக்கும் கிளாலிக்குமிடையில் மணிப்பர்ஸ் பேர்சுடன் ஒரு தொகைப் பணமும், சிறுபிள்ளையின் காதணியும் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் திருமதி கு. மனோகரன், போர்க்கால வீதி, சிவபாதம் மில், உடுப்பிட்டி என்ற முகவரியில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும்.

(கி-788)

### தேவை

தேநீர்ச்சாலைக்கு ரொட்டி போடக்கூடிய அனுபவமுள்ள உதவியாளர் தேவை. சம்பளம் நேரில் பேசிக்கொள்ளலாம். கம்ஸா ரீ றூம், மானிப்பாய் வீதி, உரைப்புலம், ஆனைக்கோட்டை. (ஏ-3810)

### நாளை சனி மாற்றம்

வாக்கியப்படி நாளை சனி மாற்றம் ரூ 10/- எனும் விற்பனையாகின்றது. T. V. பாலா, சோதிட நிலையம், இணுவில். (கி-790)

## விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

(மானிப்பாய்)

விவசாய அபிவிருத்தி ஆராய்ச்சி அமைச்சு இலங்கைப் பிரஜைகளிடமிருந்து பின்வரும் பதவிகளுக்கு விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

திட்ட உத்தியோகத்தர்:- கல்வித் தகைமைகள்:- பட்டதாரிகள் அல்லது க. பொ. த உயர்தரம் விவசாய அபிவிருத்தி வேலைகளில் அனுபவம் வயதெல்லை 26—45க்கு இடைப்பட்டவர்.

தொழில் நுட்ப உத்தியோகத்தர்:- தேசிய தொழில் நுட்பத் தராதரப்பத்திரம் (விவசாயம்) அல்லது தேசிய தொழில் நுட்பச் சான்றிதழ் அத்துடன் இரண்டு வருட வேலை அனுபவம், வயது 22 தொடக்கம் 42 வரை.

பெரும்பாக உத்தியோகத்தர், மேற்பார்வை சேவைகள்:- பட்டதாரிகள் அல்லது விவசாய டிப்ளோமா. வயது 22 க்கும் 35க்கும் இடைப்பட்டவர்.

திறபணி செய்வோர்: 8-ம் வகுப்பு சித்தியடைந்திருத்தல் வேண்டும். அத்துடன் 18 வயதுக்கும் 40க்கும் இடைப்பட்டவராயும் இருத்தல் வேண்டும்.

விண்ணப்ப முடிவு திகதி 24-2-94 ஆகும்.

இது சம்பந்தமான விபரங்கள் இம்மாதம் 3ம் திகதி வெளிவந்த டெய்லி நியூஸ் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. இவற்றை நாம். செயலக திட்டமிடல் பணிமனையில் பார்வையிடலாம்.

-7-கி

---

★ குறுமுனிபோல் கன்னித்தமிழுக்கு கலங்கரை விளக்கமாய் இருந்தனையோ எங்கு காண்போம்! குலரத்தினமையாவுக்கு

**கண்ணீர் காணிக்கைகள்**

சிவன் ஸ்ரோர்ஸ்,

வளாகச் சந்தி, திருநெல்வேலி.

---

"ஐயா"வின் பிரிவால் உளமழிந்து உழல்கின்றோம்

**கண்ணீர் அஞ்சலிகள்**

கண்ணன் லொட்ஜ்

வளாகச் சந்தி, திருநெல்வேலி.

---

எங்கள் வாழ்வும் வளமும் சங்கத் தமிழே என முழங்கிய ஐயா அவர்களே உங்களை என்றும் நினைவு கூருவோம்!

**கண்ணீர் அஞ்சலிகள்!**

**சீமாட்டி** (வடஇலங்கையின் சிறப்புமிகு புடவை வியாபாரிகள்)

122, மின்சாரநிலைய வீதி

(மேல்மாடி) யாழ்ப்பாணம்.

---

★ அகவைகள் எண்பதை தாண்டினும் அழகு தமிழுக்கு அணிசேர்த்த காவலனே எங்கு சென்றாய்!

துயரம் தாளாது

**கண்ணீர் அஞ்சலியை**

சமர்ப்பிக்கின்றோம்!

**அஜந்தாஸ்**

54, பெரியகடை, யாழ்ப்பாணம்.

---

★ தந்தையைப் போல எம்மை வழிநடத்திய ஐயா! எங்கு உன்னைக் காண்போம்!

குலரத்தினமையாவுக்கு

**கண்ணீர் அஞ்சலிகள்**

ஸ்ரீலங்கா புத்தகசாலை

அன் அச்சகம்

(பழம்பெரும் புத்தக வியாபாரிகள்)

234, காங்கேசன்துறை வீதி,

யாழ்ப்பாணம்.

---

"குலரத்தினம் ஐயா" இறைவனுடன் கலந்துவிட்டார் என்ற செய்தி தமிழ் உலகத்தையே கலங்கவைத்துவிட்டது!

அறிஞர் பெருந்தகைக்கு

**கண்ணீர் அஞ்சலிகள்!**

**பூபாலசிங்கம் புத்தகசாலை,**

யாழ்ப்பாணம்.

---

# செப்ரிசிமியாவிற்கு மேலும் இருவர் மரணம்

(யாழ்ப்பாணம்)

செப்ரிசிமியா நோயினால் பீடிக்கப்பட்ட இருவர் யாழ். ஆஸ்பத்திரியில் மரணமானார்கள்.

குருநகரைச் சேர்ந்த றெஜினோல்ட் சுபாஜினி - வயது 2, கண்டாவளையைச் சேர்ந்த சந்தனம் பெரியசாமி - வயது 32 ஆகிய இருவருமே மரணமானவர்களாவர்.

இவர்களில் சந்தனம் பெரியசாமி என்பவரின் சடலம், யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. -தி

## தூதுவர் கொலை

(கொழும்பு)

சுவீடனின் முன்னாள் இலங்கைத் தூதுவர் பத்திரபால விக்கிரமதுங்க, நேற்று கொலை செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(5ம் பக்கம் பார்க்க)

---

பல்கலைப் புலவர், சைவப்புலவர்

**க.சி. குலரத்தினம் அவர்களின்**

## ஆன்ம சாந்திப் பிரார்த்தனை

இலக்கிய கலாநிதி, பண்டிதமணி
சி. கணபதிப்பிள்ளை அவர்களால்
பல்கலைப் புலவர்
பட்டமளிக்கப்பட்டுக்
கௌரவிக்கப் பெற்றவரும்,
திருநெல்வேலி சைவாசிரிய கலாசாலைப்
பழைய மாணவர்களில்
மூத்த அறிஞரும்
பண்டிதமணி நூல் வெளியீட்டுச்
சபையின் ஆரம்பகால
உறுப்பினருமான
சைவப்புலவர் க. சி. குலரத்தினம் அவர்களின்
ஆன்மா சாந்தியுறும் வண்ணம்
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

| | |
|---|---|
| பண்டிதை | ஆசிரியமணி |
| பொன். பாக்கியம் | அ. பஞ்சாட்சரம் |
| தலைவர். | காரியதரிசி. |

**பண்டிதமணி நூல்வெளியீட்டுசபை**

உரும்பிராய். (கி-787)

---

உ

யாழ் — வண்ணை

ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தானம்

## இலட்க்ஷார்ச்சனை விஞ்ஞாபனம்

**10-02-94 — 19-02-94**

(இன்று) வியாழக்கிழமை

நிகழும் ஸ்ரீமுக வருடம் தைத்திங்கள்

28-ந் திகதி [10-02-1994]

வியாழக்கிழமை

திருவோண நட்சத்திரம் தொடக்கம்

மாசி 7-ந் திகதி [19-02-1994]

சனிக்கிழமை

ரோகிணி நட்சத்திரம் வரை

10 நாட்கள் தொடர்ந்து

★ இலட்க்ஷார்ச்சனை ★

நடைபெற திருவருள் கூடியுள்ளது.

★ பிரதி தினம்: காலை 9 மணிக்கு ஸ்ரீதேவி, பூமிதேவி சமேத ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாளுக்கு ஸ்நபன அபிஷேகம் நடைபெறும்.

★ மாலை 4-30 மணிக்கு இலட்க்ஷார்ச்சனையும், விசேட பூசையும் நடைபெறும்.

ஆரம்பதினமான 10-ந் திகதி தொடக்கம் 19-ந் திகதி வரை தொடர்ந்து 10 தினங்கள்

மாலை 6-15 தொடக்கம் 7-30 வரை

பலாலி ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர் திரு. சிவமகாலிங்கம் (B. A. Dip. Ed.) அவர்களின்

★ மகாபாரதம் ★

தொடர் சொற்பொழிவு இடம்பெறும்.

தேவஸ்தான ஆதீன மகாசபை.

(ஏ-3809)

## இளங்கலைஞர் மன்றம்
## 14 ஆவது ஆண்டு
## இசைவிழா

இடம்: மன்ற கலாமண்டபம்
காலம்: 12-02-94 — 26-02-94
தினமும் பி. ப. 4-00 மணி — இரவு 10-00 மணி

மேற்படி விழாவில்

நாதஸ்வர — தவில் ★ வாய்ப்பாட்டு
★ வயலின் ★ வீணை ★ வேணுகானம்
★ மிருதங்க இசை ★ வில்லிசை
★ கதாப்பிரசங்கம் ★ பரதநாட்டியம்

போன்ற பலதரப்பட்ட இசை நிகழ்ச்சிகளும் இடம்பெறும்.

° இளம் கலைஞர்களும் முன்னணிக் கலைஞர்களுமாக 500க்கு மேற்பட்ட கலைஞர்கள் பங்குகொள்வர்.

★ அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம் ★

மேற்படி மன்றத்தினர்

(ஏ-3811)


# குலரத்தினம் ஐயாவின் மறைவு ஈடுசெய்ய முடியாத இழப்பு
## இந்துசமய பேரவை அஞ்சலி

(யாழ்ப்பாணம்)

பல்கலைப் புலவர், சைவப் புலவர், மூதறிஞர் அமரர் க. சி. குலரத்தினம் ஐயாவின் திடீர் மறைவு குறித்து இந்து சமயப் பேரவை வெளியிட்ட இரங்கலறிக்கையில் தனது அதிர்ச்சியையும், ஆழ்ந்த கவலையையும் தெரிவித்துள்ளது. அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

அமரர் குலரத்தினம் சைவமும் தமிழும் தமிழ் மக்களின் இரு கண்கள் எனப் போற்றி அவற்றின் வளர்ச்சிக்காக அரும்பணியாற்றியவர். அரும் தமிழ் ஆசானாகவும் கல்வி வெளியீட்டு திணைக்களத்தில் பாடநூல் ஆசிரியராகவும் பலகாலம் அரும்பணியாற்றியவர். எம் இளம் சமுதாயத்தினர் தமிழையும் சைவத்தையும் நன்கு கற்க வேண்டி நூற்றுக்கணக்கான தமிழ் சைவ சமய நூல்களை இலகுவான தமிழ் நடையில் வெளியிட்டவர். இலைமறை காய் போல் இருந்த ஈழத்துத் தமிழ் அறிஞர்களினதும், சைவச் சான்றோர்களினதும், வாழ்க்கை வரலாற்றைத் தேடிக் கண்டுபிடித்து "தமிழ் வளர்த்த செம்மல்கள்", "சைவம் வளர்த்த சான்றோர்" என்ற நூல் வரிசையினை எழுதி வெளியீடுசெய்யும் அரும்பணியில் ஈடுபட்டிருந்தவர். அமரர் குலரத்தினம் ஐயா ஒரு தலைசிறந்த பேச்சாளன். அவர் பங்குபற்றாத தமிழ், சைவசமய விழாக்களோ, கருத்தரங்குகளோ கிடையா. சமகாலத் தமிழ் சைவ அறிஞர்களிடையே தர்க்கரீதியிலும், வரலாற்று அடிப்படையிலும் விடயங்களை விளக்குவதில் ஐயா அவர்கள் சிறந்து விளங்கினார்கள். சிறப்பாக மண்வாசனைச் சொற்களை எடுத்தாள்வதில் அவர் தனது தனித் தன்மையைக் காட்டினார். அவரது இழப்பு ஈடுசெய்யமுடியாததொன்றாகும்.


மூதறிஞர்

**க. சி. குலரத்தினம்**

அவர்களின் மறைவு குறித்து எமது

**கண்ணீர் அஞ்சலியை**

சமர்ப்பிக்கின்றோம்

வர்த்தக ஊழியர் சங்கம்,
யாழ்ப்பாணம்

(ஏ-3919)


## மலேரியாவினால் குழந்தை மரணம்

(யாழ்ப்பாணம்)

மலேரியாக் காய்ச்சல் காரணமாக நேற்று யாழ். போதனா வைத்தியசாலையில் பெண் குழந்தை ஒன்று மரணமானது.

பலாலியைச் சேர்ந்த நகுலேஸ்வரன் தர்ஷிகா (வயது-02) என்ற பெண் குழந்தையே மரணமுற்ற குழந்தையாகும். -நி

## நவபுரத்தில் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

அறவழிப் போராட்டக்குழுவின் ஆதரவில் கூடிய ஐக்கிய கிராமிய இராஜ்ஜியம் நடத்தும் விழிப்புணர்வு கருத்தரங்கு நவபுரம் பாடசாலையில் எதிர்வரும் 13ம் திகதி ஞாயிற்றுக்கிழமை திரு. ப. செல்லத்துரை தலைமையில் நடைபெறவுள்ளது.

இக்கருத்தரங்கில் கிராம மட்டத்திலுள்ள சமூகசேவையாளர்கள் பங்குபற்றவுள்ளனர். -நி

## முதலாவது ஆண்டு விழா

(யாழ்ப்பாணம்)

அறிவு வளர்ச்சி அமைப்பின் முதலாவது ஆண்டுவிழா சமீபத்தில் சின்னம்மா வீதி பாலயத்தில் திரு. கே. பத்மதனேஸ்வரன் தலைமையில் நடைபெற்றது.

திருக்குறள், சொல்வேந்தன் மனனப் போட்டிகளில் வெற்றியீட்டிய பாலர் பாடசாலை சிறுவர்களுக்கு விழா விருந்தினர்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். -நி


# JAFFNA COLLEGE Institute of Technology
## VADDUKODDAI

முழுநேரப் பயிற்சி நெறிகள் ஆரம்பமாக உள்ளன

### 1. TECHNICIAN DIPLOMA COURSES (ENGLISH MEDIUM)

(i) Civil Engineering & Quantity surveying — 2 years

**Educational qualification:**

G. C. E. (O/L) - minimum six subjects including Maths - C, Science - C, English - S.

கல்வித்தகைமை:

G. C. E. (O/L) - குறைந்த பட்சம் 6 பாடங்கள்; கணிதம் - C, விஞ்ஞானம்-C ஆங்கிலம் - S உட்பட.

### 2. DIPLOMA COURSES

(i Draughtman ship - Civil

(ii) Computer Programming & Data processing (Basic Cobol & d Base III+) Practicals on IBI - PCAT & MAT 386 Industrial controller.

**Educational qualification:**

G C. E (O/L) - minimum six subjects with credit for maths.

கல்வித்தகைமை:

G. C. E. (O/L) - குறைந்த பட்சம் 6 பாடங்கள், கணிதம் - C உட்பட

(iii) Advanced Diploma in Computing

(Syllabus includes -British computer society & Australian computer society) — 1 Year.

**Educational qualification:**

G. C. E. (O/L) — minimum six subjects with Maths - C & English - S
G. C. E. (A/L) - minimum one Subject

### 3. TECHNICIAN CERTIFICATE COURSES

(i) Air - conditioning & Refrigeration — 1½ Years
(ii) Radio & T. V. Servicing — 1 Year
(iii) Automobile Technology — 1 Year

**Educational qualification:**

G.C.E.(O/L) with Maths-S & Science-S

கல்வித்தகைமை:

G.C.E.(O/L)—கணிதம்-S, விஞ்ஞானம்-S

### 4. CRAFT CERTIFICATE COURSES (தமிழ்மொழி மூலம்)

(i) Machine shop Practice - 1 Year
இயந்திரப் பட்டறைப் பயிற்சி - ஒரு வருடம்
(ii) Electrical Wiring & Installation Practice - 1 Year
மின்னிணைப்புப் பயிற்சி - ஒரு வருடம்
(iii) Welding Practice - 1 Year
ஒட்டுநர் பயிற்சி - ஒரு வருடம்

கல்வித் தகைமை:

க. பொ. த. (சா. த) வரை படித்திருத்தல் வேண்டும்.

### விசேஷட கவனத்திற்கு

★ இல "4" தவிர்ந்த ஏனைய பயிற்சி நெறிகளாவும் மாணவர்கள் வெளிநாட்டுப் பரீட்சைகளை எதிர்கொள்ளத்தக்க வகையில் ஆங்கில மொழி மூலம், வேண்டிய தமிழ் விளக்கத்துடன் நடத்தப்படும். இதற்கு ஏற்ப பயிற்சிக்காலம் பூராவும் ஆங்கிலம் கட்டாய பாடமாக்கப்பட்டுள்ளது.

★ இதர வசதிகள்:

1. நூலகம்
2. விடுதி (ஆண், பெண் இருபாலாருக்கும் தனித்தனியே)
3. விளையாட்டுத்துறை

★ விண்ணப்பப்படிவம்: ரூபா 30

பெற்றுக் கொள்ளக் கூடிய இடம்:
"C. L. S" புத்தகசாலை,
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
"J. C. I. T" அலுவலகம் வட்டுக்கோட்டை

விண்ணப்பப் படிவங்களை 14 - 02 - 1994க்கு முன் வட்டுக்கோட்டையில் கிடைக்கக்கூடியதாக தபால் மூலம் அல்லது நேரில் சமர்ப்பிக்கவும்.

★ போதியளவு மாணவர்கள் விண்ணப்பிக்குமிடத்து மாத்திரமே குறிப்பிட்ட பயிற்சி நெறிகள் ஆரம்பிக்கப்படும்.

முக்கிய குறிப்பு

The "Open University of Sri Lanka" (O U S L) has Granted EXEMPTIONS for the Technican Diploma Courses.

தொழில் நுட்ப டிப்ளோமா பயிற்சி நெறிகளுக்கு, இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தின் "பாடவிதான - விலக்கு" (Exemption) அளிக்கப்பட்டுள்ளது.

★ நேர்முகப் பரீட்சை 17ம், 18ம் திகதிகளில் நடைபெறும்.

**DIRECTOR**

(ஏ-3817)

